# செய்தி வெளியீடு

**செய்தி வெளியீடு எண்.06/2022** **நாள் : 21.03.2022**

21.03.2022 அன்று மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்களின் தலைமையில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்த ஆய்வுக் கூட்டம் தலைமைச் செயலகத்தில் நடைப்பெற்றது.

மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்களின் தலைமையில் 2021-22ஆம் நிதியாண்டில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையில் அறிவிக்கப்பட்ட திட்டங்களின் செயலாக்கம் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் 21.03.2022 அன்று அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை திரு.சிவ்தாஸ் மீனா, இ.ஆ.ப. அவர்களின் முன்னிலையில் தலைமைச் செயலகத்தில் நடைப்பெற்றது.

இக்கூட்டத்தில் நகராட்சி நிர்வாகம், பெருநகர சென்னை மாநகராட்சி, பேரூராட்சிகள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மற்றும் சென்னை குடிநீர் வாரியத்தின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளின் தற்போதைய நிலை குறித்தும், அறிவிக்கப்பட்ட திட்டங்களில் முடிக்கப்படாமலுள்ள பணிகளின் விவரங்கள் குறித்தும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. நிர்ணயிக்கப்பட்ட கால அளவிற்குள் அனைத்து பணிகளையும் முடிக்கப்பெற்று பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவர வேண்டுமென சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்.

இக்கூட்டத்தில் அரசு முதன்மை செயலாளர்/ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி திரு.ககன் தீப் சிங் பேடி, இ.ஆ.ப., முதன்மை செயலாளர்/ மேலாண்மை இயக்குநர், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம், திரு.சா.விஜயராஜ்குமார், இ.ஆ.ப., பேரூராட்சிகளின் ஆணையர், திரு.ஆர்.செல்வராஜ், இ.ஆ.ப., மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், திரு.வி.தட்சிணாமூர்த்தி, இ.ஆ.ப., நகராட்சி நிர்வாக இயக்குநர், திரு.பி.பொன்னையா, இ.ஆ.ப., மற்றும் துணை ஆணையர்கள், தலைமை பொறியாளர்கள், கண்காணிப்பு பொறியாளர்கள் உள்ளிட்ட பல்வேறு அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு மேலாளர்,
சென்னைக் குடிநீர் வாரியம்